# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 199/மா/2022**

**நாள்: 08.07.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02, (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 8.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.10.2022–ல் பெறப்பட்டு, 199/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 8.10.2022 நாளிட்ட தனது மனுவில்;

மதுரை மாநகராட்சி, வார்டு எண்.22, மண்டலம் - 2 (வடக்கு) பாத்திமா கல்லூரி எதிர்புறம், விளாங்குடி, மீனாட்சி நகர் பாண்டியன் தியேட்டர் ரோடு, மதுரை-18, கதவு எண்.5Aல் இயங்கிவரும் சபாராம் மருத்துவமனை மற்றும் ஸ்ரீசாய் பல் மருத்துவமனைகளுக்கு, உரிமையாளர் Dr. K. பாலசுப்பிரமணி ஆவார். மருத்துவமனையானது வீட்டு மனைப்பிரிவில் கட்டிட அனுமதி பெற்று மருத்துவமனை முறைகேடாக நடத்திவருகிறார். இதற்கு சொத்து வரி வணிகத்திற்கு உண்டான வரி செலுத்தாமல் வீட்டிற்கான சொத்து வரி செலுத்தி வருகிறார். மேலும் இங்கு பணிபுரியும் செவிலியர்களுக்கு (Nurse) மற்றும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு தொழிலாளர் வரி செலுத்தாதனால் மதுரை மாநகராட்சி வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது. மேலும் இந்த மருத்துவமனையை கண்காணித்து உரிய சொத்துவரி வசூலிக்க தவறியதும் வருவாய் இழப்பிற்கு காரணமான மாநகராட்சி முன்னால் அலுவலர்கள் மற்றும் இன்னால்

அலுவலர்கள், சம்பந்தப்பட்ட உரியவர்களிடம் - உரிய விடுபட்ட இழப்பீட்டு தொகையை இவர்களிடம் இருந்து பெறப்பட்டு (Recover) மாநகராட்சி கணக்கில் வரவு வைத்து இழப்பீட்டை சரிசெய்யவும், இதற்கு காரணமானவர்கள், முன்னால், இன்னால் அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மேலும் மேற்படி சபாராம் மருத்துவமனை மற்றும் ஸ்ரீ சாய் மருத்துவமனையில் சுமார் 10 படுக்கை வரையில் உள்ளது என்பதாலும், இது பொது மக்கள் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால், தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 – பிரிவு 2 (8)-ன்படி முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது உரிமம் புதுப்பிக்க வேண்டும், ஆனால் உரிமம் பெறவில்லை. மேலும், இது பொது பயன்பாடு கட்டிடம் என்பதால் வட்டாட்சியரிடம் உரிய அனுமதி பெற வேண்டும்.

மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973-ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் 1971 – பிரிவு 33-ன்படி நகர் ஊரமைப்பு திட்ட இயக்கத்தில் ஒப்புதல் பெறவில்லை. மேற்படி சபாராம் மருத்துவமனை உரிய துறைகளில் உரிய அனுமதி இல்லாமல் சட்டத்திற்கு புறம்பாகவும், விதிகள் மீறி இயங்கிவரும் இம்மருத்துவமனையை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன் கீழ் மூடுதல் மற்றும் முத்திரையிடுதல் (Lock and Seal) மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுத்திட மதுரை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்திரவிட்டும் மேற்படி மருத்துவமனை (Hospital) உரிய அனுமதியின் பேரில் இயங்குகிறதா என்பதை கண்காணிக்கத் தவறிய மாநகராட்சி முன்னால், இன்னால் சம்மந்தப்பட்ட உரிய அலுவலர்கள் மீது துறையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்திரவிட வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகவும் பணிவன்புடன், தாழ்மையுடன் வேண்டுகிறேன். மேற்படி புகார் குறித்து 6.10.2022 தேதியில் மதுரை மாநகராட்சி ஆணையர் மற்றும் உதவி ஆணையர் அவர்களுக்கு பதிவு தபாலில் அனுப்பியுள்ளேன்.

**2. இம்மனு மீதான அறிக்கை இம்முறைமன்ற கடித நாள் 13.02.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி ஆணையரிடமிருந்து கோரப்பட்டது. ஆனால் அறிக்கை பெறப்படவில்லை.**

**3. இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 28.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 28.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி, வார்டு எண்.22, மண்டலம்–2ல் (வடக்கு) விளாங்குடி மீனாட்சி நகர், பாண்டியன் தியேட்டர் ரோடு கதவு எண்.54ல் இயங்கி வரும் சபாராம் மருத்துவமனை மற்றும் ஸ்ரீசாய் பல் மருத்துவமனை கட்டடங்கள் உரிய அனுமதி பெறாமல் மனை பிரிவுக்கான கட்டிடத்தில் நடந்து வருகிறது. மேற்கண்ட கட்டடம் பொதுமக்கள் பயன்பாட்டுக் கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் பிரிவு 2(8) (Section 2(8) of the Tamil Nadu Public Building(Licensing Act 1965)ன்படி முறையாக உரிமம் பெறவில்லை. மேலும் மருத்துவமனையானது பொது மக்கள் உபயோகப்படுத்தும் இடமாவதால் இக்கட்டிடத்திற்கு 1971ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டப்பிரிவு 33ன்படி, நகர் ஊரமைப்பு துறையில் முறையாக ஒப்புதல் பெறவில்லை.

மேலும், மேற்கண்ட மருத்துவமனை கட்டடங்களுக்கு வணிக கட்டிடத்திற்குண்டான வரி மாநகராட்சியால் வசூலிக்கப்படுவதில்லை. மாறாக, வீடுகளுக்கான சொத்து வரி செலுத்தி வருகிறார்கள். தொழில் வரியும் வசூலிக்கப்படவில்லை. இதனால் மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட கட்டடங்கள் மீது மாநகராட்சி அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவும் உரிய துறையில் அனுமதி பெறாமல் முறையற்ற கட்டிடத்தில் இயங்கி வரும் சபாராம் மருத்துவமனை கட்டிடத்தை (Hospital) நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56(1) மற்றும் 57 ன் கீழ் மூடுதல் முத்திரையிடுதல் போன்ற நடவடிக்கை மாநகராட்சியால் எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**4. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவிப் பொறியாளர் 28.06.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மதுரை மாநகராட்சி, மண்டலம்–2 (வடக்கு) வார்டு எண்.22, விளாங்குடி மீனாட்சி நகர், பாண்டியன் தியேட்டர் ரோடு கதவு எண்.54ல் இயங்கி வரும் சபாராம் மற்றும் சாய்ராம் மருத்துவமனைகள் கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட கட்டடமாகும். மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட மனுவினையொட்டி மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து வரைபட நகல் கோரப்பட்டுள்ளது. மேலும் கட்டடத்தை அளவீடு செய்வதற்கான Section 131 Notice வழங்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்கண்ட மருத்துவமனையை அளவீடு செய்து, அங்கு விதிகளை மீறி கட்டடம் கட்டப்பட்டிருப்பின், அக்கட்டடத்திற்கு Tamil Nadu Town and Country Planning Act 1971–ன்படி Stop work Notice / Notice calling for approved plan அறிவிப்பினையும் மேலும் Lock and Seal, De-occupation and Demolition Notice மாநகராட்சியால் வழங்கிடவும் தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேற்கண்ட கட்டடத்திற்கான சொத்து வரி மற்றும் தொழில் வரி குறித்த பொருள் மதுரை மாநகராட்சி நிர்வாக அலுவலகத்தை சார்ந்ததால், அதன் விவரங்களை இம்முறை மன்றத்தில் அளிக்க இயலவில்லை. மேலும் இந்நேர்வு தொடர்பாக மாநகராட்சி ஆணையர் / உதவி ஆணையரிடமிருந்து அறிக்கைகள் பெறப்பட்டு இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்க இயலவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவிப் பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் திரு. R. மயில்சாமி, மதுரை மாநகராட்சி வார்டு எண்.22, மண்டலம் 2 (வடக்கு) பாத்திமா கல்லூரி எதிர்புறம் விளாங்குடி மீனாட்சி நகர் பாண்டியன் தியேட்டர் ரோட்டில் இயங்கிவரும் சபாராம் மருத்துவமனை மற்றும் ஸ்ரீ சாய் பல் மருத்துவமனை கட்டடத்திற்கு உரிய அனுமதி பெறாமல் இயங்கி வருவதாகவும் எனவே, 1971ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவுகளின்படி நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்ட சபாராம் மற்றும் சாய்ராம் மருத்துவமனைகள் கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கட்டடம் என்பதும், மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து அக்கட்டடத்திற்கான வரைபட நகல் கோரப்பட்டுள்ளது என்பதும், மேலும் அக்கட்டடத்தை அளவீடு செய்வதற்காக Section 131 தாக்கீது வழங்கப்பட்டுள்ளது என்பதும், அக்கட்டடத்திற்கான சொத்துவரி மற்றும் தொழில் வரி குறித்த பொருள் மதுரை மாநகராட்சி நிர்வாக அலுவலகத்தை சார்ந்ததால், அதன் விவரங்களை அளிக்க இயலவில்லை என்பதும், மதுரை மாநகராட்சியின் உதவி பொறியாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வு தொடர்பாக மனுதாரர் கடந்த அக்டோபர் 2022ல் புகார் மனு அளித்தும், பின்னர் இம்முறைமன்றத்திற்கு புகார் அளித்ததின் அடிப்படையில் 7.11.2022ல் நோட்டீஸ் மற்றும் 13.2.2023 நாளிட்ட நினைவூட்டு கடிதம் இம்முறைமன்றத்தால் மதுரை மாநகராட்சிக்கு அனுப்பப்பட்டும், **விசாரணை நாள் வரை எந்தவித நடவடிக்கை எடுக்காதது மதுரை மாநகராட்சி அலுவலர்கள் எவ்வளவு மெத்தனமாக செயல்படுகிறார்கள் என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விழைகிறது.** மருத்துவமனை நிர்வாகத்திடமிருந்து வரைபடம் எப்போது கோரப்பட்டுள்ளது என்ற விவரம், அளவீடு செய்வதற்கான Section 131 கீழ் தாக்கீதும் எப்போது வழங்கப்பட்டது என்பதும் இம்முறைமன்றத்திற்கு தெரியப்படுத்தவில்லை. இச்செயல் மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். இம்முறைமன்றம் 7.11.2022 மற்றும் 13.2.2023 ஆகிய நாளிட்ட கடிதங்களில் மனுதாரரின் மனு மீதான அறிக்கை கோரப்பட்டு எட்டு மாதங்கள் கடந்த நிலையில் மதுரை மாநகராட்சியால் எவ்வித அறிக்கையும், தகவலும் விசாராணை நாளன்று கூட அளிக்காத மதுரை மாநகராட்சியின் செயல் ஏற்கத்தக்கதல்லது மட்டுமல்லாமல் கண்டிக்கத்தக்கதாகும். மேலும் சொத்துவரி மற்றும் தொழில் வரி குறித்து மதுரை மாநகராட்சி நிர்வாக அலுவலகத்தை சார்ந்தது என்பதால் அதற்கான விவரங்களை தன்னால் அளிக்க இயலவில்லை என சாதாரணமாக தெரிவித்துள்ள உதவி பொறியாளரின் கூற்று ஏற்கத் தக்கதல்ல. இதற்கான அலுவலரையும் இம்முறைமன்ற விசாரணையில் கலந்துகொள்ள மதுரை மாநகராட்சி ஆணையர் / உதவி ஆணையர் அறிவுறுத்தியிருக்க வேண்டும்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக,

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx

(b) xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules.

மற்றும்

பிரிவு 12 (1) The Ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences in the following manner. namely:-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body - ன்படி பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மனுதாரர் 6.10.2022 நாளிட்டு புகார் மனு அளித்தும், இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கை 7.11.2022 நாளிட்ட **இம்முறைமன்ற தாக்கீதின் மூலம் கோரியும், அதன்பிறகு 13.2.2023 நாளிட்ட நினைவூட்டு கடிதம் அனுப்பியும் எவ்வித**

**நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம் 2 (வடக்கு) உதவி ஆணையர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.** மேலும், மதுரை மாநகராட்சி மேற்கண்ட மருத்துவமனையிலிருந்து உடனடியாக வரைபடம் பெற்றும், அளவீடு செய்வதற்கான Section 131ன் கீழ் வழங்கப்பட்ட தாக்கீது அடிப்படையில் அம்மருத்துவமனையை அளவீடு செய்து, அம்மருத்துவமனை **கட்டடம் விதிகளை மீறி கட்டப்பட்டது என கள ஆய்வில் தெரியவந்தால் அக்கட்டடத்திற்கு Tamilnadu Town and Country Planning Act 1971 ன்படி உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும்,** எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 08-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி, மனை எண்.5, அய்யப்பன் தெரு,
   செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.

2. ஆணையர், மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை – 2.

3. உதவி ஆணையர், மண்டலம் - 02, ( வடக்கு ), மதுரை மாநகராட்சி, மதுரை.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.

இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11/7/23

செயலாளர் (முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் சென்னை-600 032